" வைத்திய அட்டவணை "

எம். வி. நடராஜ உடையார்,
சிங்கபுரம் போஸ்டு,
சேலம்.

தாளக பஸ்பம்.

தாளகம் நன்கு செய்த பீங்கானில்விட்டு காரம் பசுவின் கோமயம் விட்டு ஏழு நாள் கழித்து 1 வெள்ளைத் துணியில் முடிந்து இறுக்கி கட்டி 1 பெரிய பாத்திரத்தில் சுண்ணாம்பு கல் விட்டு தாள முட்டையை வைத்து மேல் பாதி சுண்ணாம்பு கல் போட்டு வெந்நீர் விட்டு 20 நாள் தண்ணீர் வற்றாமல் ஜலம் விட்டு 21 நாள் எடுத்து தாளத்தை கழுவி கோப்பையில்விட்டு மிதக்க எருக்கம் பால் நிறைய விட்டு 7 தடவை ரவியிலரைத்து எடுத்து கொடிவேலி வேர் சுரந்து குகை செய்து தாளத்தை உள் வைத்து முன் சாந்து மேல் மூடி புளியம் பட்டை சாம்பல் சட்டியில் பாதி போட்டு மேல் குகையை வைத்து மேலும் சாம்பல் போட்டு மேல் குகையை வைத்து மேலும் சாம்பல் போட்டு மேல் மூடி சீலை செய்து உலர்த்தி நாலு கடை எரு முட்டை மத்தியில் வைத்து நெருப்பிட்டு தழலான பின் மேல் உமி நெல்லும் கொட்டி வெந்து ஆறின பின் எடுத்தால் குகை யோடு வெள்ளைப் பஸ்பமாயிருக்கும். இதை சீசாவிலடைத்து உள் மூகம் படிக்கு சகல வியாதிக்கும் அனுபானங்களிடவும்.

எருமைச் சாணியில் மூசை பண்ணி காயவைத்து புளியம் பொருக்கு சுட்டு தழலான பின் மலவிட்டனைத்து தாளகம் 1-க்கு 8 பாகம் கரியை நொறுக்கி மேற்கண்ட மூசையில் பாதி போட்டு மேல் தாளகம் வைத்து மேலும் பொருக்கு கரி தூள் போட்டு மேல் சாணி சில்லிட்டு முன் சாணியால் சந்தடைத்து உருட்டி காயவைத்து சாணி சீலை செய்து உலர்த்தி நாலு கடை எருமுட்டை மத்தியில் வைத்து புடம் போட்டு தழலான பின் உமி கொட்டி வெந்நீரில் வெந்தாறின பின் எடுத்தால் கட்டியாக வெந்து பஸ்பமதாயிருக்கும். வியாதி யறிந்து அரிசியிடை அனுபானத் திலிட அதிக பசி உண்டாம். ரொட்டி, நெய் வேண்டியதெல்லாம் சாப்பிடலாம். தயிர், இள நீர், புளிப்பு, கசப்பு, மாமிசம் ஆகாது.

ரவி லோகம் பொரி.

லோக ரவி நன்கு செய்து சுத்தி பண்ணி பலம் 3½ எடை உப்பு சேர் 1 சித்தேரண்டம் பருப்பு பலம் 2 ஒரு பாத்திரத்தில் அடியில் பரப்பிட்டு மேல் தகடு இட்டு மேல் உப்பிட்டு பாத் திரத்திற்கு முக்கால் ஜலம் விட்டு சில்லு மூடி சீலை செய்து புடம் கஜமிட்டு ஆறிய பின் எடுக்க வெளுத்து பொரி போலிருக்கும், இந்த பஸ்பம் அரிசியிடை சரீரமறிந்து கொடுக்கவும், குன்மட்ட குஷ்டமும் முதலிய வியாதிகள் தீரும். ரச பஸ்பத்திற்கு சமமாகும்.

தாது விருத்திக்கு.

ஆனை நெருஞ்சில் 1 கடுக்காய் 1 தகர விரை 1 குதிரை நிகம் காலே அரைக்கா விராகன் பின்னையும் 12 ல் நறுக்கி ஒன்று சேர்த்து நல்லெண்ணெய் விட்டு பிசிறி குதிரை நகமும் சிறுக சிறுக நறுக்கி சேர்த்து குழித் தைலம் இறக்கிக் கொள்ளவும். 1 துளி வெற்றிலையில் சாப்பிட்டு தவண்ட கோசத்திற்கு துவாரத்தில் படாமல் தடவி வெற்றிலை போர்த்தி நூலால் கட்டி வைக்கவும். நரம்பு தளர்ச்சி நீங்கி போக சக்தியை உண்டு பண்ணும். இது உத்தமர் களுக்கே அன்றி மற்றவர்களுக்கும் ஆகாது.

இரத்த பாஷாண செந்தூரம்.

நெல்லிக்காய் கெந்தி, சூரி, சூதம், இது சரிஎடையாக கூட்டி காட்டு முள்ளங்கி ரசம் விட்டரைத்து உடனே குகையில்விட்டு சில்லிட்டு சீலை செய்து புடமிட செந்தூரம் மதியில் கொடுக்க.

நாகக் கிண்ணி.

ஒரு பலம் சுத்தநாகம் சுன்னி செய்த சூதம் ஒரு பலம் விட்டு வேப்பங்குச்சியால் கடையரசம் கிண்ணியில் சுவரிப்பேரிய். தாரம், சூரி, கெந்தி, மூன்றும் கிண்ணியில் போட்டு காலடி படாத மணலெடுத்துச் சட்டியில்விட்டு அதன் மணல் மேல் கிண்ணியை புதைத்து அடுப்பேற்றி தீ எரித்து ராத்திரி 4 சாமம் சர்ப்ப நீர் சுவரச் சுவர சுருக்கிடவும். பசுவின் பால் 1 சாமம் சுருக்கிடவும். வயரவரை பூசித் திறக்கவும். மயில் கழுத்து நிறமாயிருக்கும் நிறமில்ல விட்டால் முன்மாதிரி சுருக்கிட்டெரிக்கவும் களங்காம். அரவைத்த செம்பு 1 பத்துக்கு குன்றியின கொடுக்க 8 காணும். காலையில் மதியில் கொடுக்க 8 காணும்.

ஓடவன் சுத்தி.

ஜடவன் சுத்தி.

வில்வ பழம் முசிழ் திறந்த ஜடவன் மெலிய தகடு அடித்த வேண்டுமானது பழத்திலுள் செலுத்தி பசு மஞ்சளும் காவி மண்ணும் அரைத்து அதினுள் நிரைய செலுத்தி அக்கோம் பனடத்தசீலே செய்து புடமிடவும். இம்மாதிரி 3 களிம்பரும்.

சாரித் தைலம்.

சுட்டா சுக்கா நீர் வடிகட்டி அதனிடைக்கு சாரிஅதில் பாதி கெந்தி தனித்தனி அரைத்து கல்நீர் கட்டியும் சாமரைத்த சுகள செங்கருவிட்டரைத்து குளிகை செய்து கலசத் திட்டு சில்லிட்டு குழித்தைலமிறக்கி வைத்து கொண்டு பின் இரும்பு அரப் பொடியில் கால் சேர் சாரம் கல்லுப்பு குழிக்கலிட்டு எலுமிச்சம்பழம் வார்த்து மூன்றையும் அரைக்க வெண்மையாம். ஜலத்தில் கழுவி விட்டு முன் சொன்னபடி மூன்று தரம் அரைத்துக் கழுவவும். உலர்த்தி பொடிக்களடக்காரம் பொடித்துக் கலந்து முன் தைலம் விட்டு செரிஞற் போல் உருட்டி குகையிலிட்டு சில்லிட்டு ஆறியெடுத்து முன் மாதிரி காரம் தைலம் விட்டு இம்மாதிரி முக்காலு தவும். இது தங்கத்துக்குக் சரியான செம்பு.

ரச செந்தூரம்.

வெள்ளை அழிஞ்சிவேர், விளாங்காயளவு அரைத்த குகை பண்ணி குகையில் ரசம் விட்டு மேல் மூடி சந்தடைத்து 12 சீலே செய்து புடமிட்டெடுக்க செந்தூரமாம்.

தேவி செந்தூரம்.

விளாவேர் ரசம் 1 நாள் விட்டரைத்தமேற்கண்ட வேர்பட்டை அரைத்த கவசம் செய்து சீலே செய்து குக்குடமிட செந்தூரமாம்.

ரசக் குளிகை.

ரசம் பலம் 1, ஒரு ராத்திரி செம்பொளரையிலிட்டு எடுத்து கல்வத்திட்டு கள்ளிப் பாலில் 1 நாள் அரைத்து ஒரடைக்கு ஈரிடை அம்மான் பச்சரிசி ரசம் விட்டரைத்து உருட்டி சரியிடை ரசம் குகையில் விட்டு குளிகையை வைத்து மூடி சீலே செய்து சாயக்கா மூனறு சீலே செய்து கரி நெருப்பில் வைத்து மூடி விசிரி மருகரி போட்டு விசிறி மேலும் கனமாய் கரியிட்டு விசிரி நெருப்பாளி பின் எடுக்கவும். குளிகையாம்.

தாரத் தைலம்.

தாரம் சேர் 1, பேயள்ளிச் சார் சேர், 1/2 மாம்பட்டைச் சேர் 2, அதிலே ஊரப் போட்டு 7 நாள் ஆன பின் அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து இரும்பு கலச நடுவில் அடைபோல் பூசி சில்லிட்டு சீலே செய்து பீங்கான் அடியில் வைத்து கலசத்திற்கு பிரகே 2 முழுத்தில் எரிக்கவும். தைலம் விழும். ரவி மதி தகட்டில் தடவி சிவக்க காய்ச்சி யெடுக்க பொன்னும்.

வங்க மதி.

கடல் கரை கிளிஞ்சி சுண்ணம்பு செய்து எருக்கம் பால் விட்டரைத்துகுகை செய்து குகை கொண்ட வெள் வங்கம் வைத்து மேல் சீசீ மூசை மூடி சீலே செய்து புடமிட்டாரி யெடுக்க மதியாம்.

குரிசிலே குன்னியிலே ரோசமியம் வார்த்தரைத்து மட்டு தகட்டில் தடவி காய்ச்ச மாத்துயரும்.

கெந்தி தைலம்.

கெந்தி 1, மால் தேவி, 1 தாமரை பூ சார் விட்டு 5 நாள் அரைத்தெடுத்த அடையாக தட்டி கீழேழு மேலேழு எருக்கலே போட்டு பூமியில் வைத்து 2 எருமிட்டயில் புடம் மிட்டு எடுத்து முன் போல் ரசத்தில் முன் மாதிரி அரைத்து முன் போல் புட மிட்டு கடலே போல் உருண்டை செய்து வாய்க்கு குதிரை மயிர் அடைத்த 1 பெரிய மண் சாடியில் கீழ் பாகத்தில் சீசா தலே நுழைய தகுந்தது அமைத்து சீசாவை கவுத்தி நுழைத்து சந்தில்லாமல் சீலே செய்து முக்கல் மேல் வைத்து சீசா முனைக்கு பீங்கான் பாத்திரம் வைத்து கம்மஞ் சாதம் பால் வார்த்துப் பொங்கி இந்த சாதத்தை அந்த சீசா முழுகும்படியாய் கொட்டி மேல் [illegible]

சிதராமல் எடுத்து ச்சாவில் அடைத்து கொண்டு ரவி மதி தகட்டில் சுரும்பில் தொட்டு பூசி காய்ச்சி குகையிலிட்டு உருக்கத் தெரியும்.

பாஷாண பஸ்பம்.

கருவேலங் கட்டை சாம் ஒன்று அதில் குழி செய்து பாஷாண கட்டி குள் வைத்து துளைத் தாள் உள்ளிட்டு மூப்படித்து முழுக உமி புடம் இட்டு எடுக்க பஸ்பம்.

கெந்தி தைலம்.

கோதுமை ரவை எடுத்து பிசைந்து 2 ரொட்டியாக செய்து மத்தியில் கெந்தி வைத்து மர அடியில் மூடி சந்து மூடி சட்டியில் வைத்து அடுப்பெரித்து மேலடை கருகும்படி திருப்பி இளப்பி சடவும். இம்மாதிரி 3 தரம் சுட்டெடுக்கவும். மெழுகாம். இந்த மெழுகை குப்பியில் போட்டுக் குதிரை மயிரடைத்து சீலை செய்து முன் கெந்தி தலம் போல் குப்பி கவிழ்த்து கூழ் காய்ச்சி விடவும், முன்பாகம் போல் ரவிமதி சேர்த்தலை பார்க்கவும்.

(கௌரி மெழுகு)

கௌரிக்கு ரவிப்பால் 3 நாள் விட்டரைத்து உருட்டி உருத்தமாவும் கடுகும் சமன் கள்ளிப் பாலில் அரைத்து மண்ணுருண்டையில் பொதிந்து சித்தாமணக் எண்ணெயில் எரிக்க மெழுகாம். ஆசா விட்டால் முன் முறைப்படி செய்தெரிக்கவும். மெழுகாம். பாஷாண வர்க்கங்களெல்லாம் இவ்வித பாகமாக மெழுகு பண்ணி நவ லோகத்திலும் சோதிக்கவும்.

நாக கழங்கு.

வெள்ளி 1, நாகம் 1, ரசம் 1, உருக்கி ஒரு மணியாய் செய்து ஆகாச தாமரை ரசத்தில் கெந்தி அரைத்து மணிக்கு பொதிந்து மேற்கண்ட தழை அரைத்து கவசம் செய்து சீலை செய்து புடமிட்டு எடுக்க கழங்காம்.

வெள் வங்க பஸ்பம்:

வங்கம் 1½ உருக்கி சீனம் 3 பொடித்து கிராசம் டிசருகக் சிறுகக் கொடுக்க பஸ்பமாம். விக்கல் முதலிய வியாதிகளுக்கு அநுபான மறிந்து கொடுக்க நீர் முள்ளி கொட்ட கிரந்தி என்ற கருதப்பட்டு வருக்க பஸ்பமாம்.

அப்பிரக செந்தூரம்.

சலத்தில் வெடியுப்பு போட்டு அதில் அப்ரகம் மீட்டு ஒரு நாள்ஊர வைத்து அப்ரகத்தை கல்வத்திட்டு பேய் பீர்க்கு சாத்தில் அரைத்து 1 புடமிட்டு பேய் கருப்பஞ் சாற்றில் அரைத்து புடமிட செந்தூரம் மேகம் நீரளிவு இருமல் அநுபான மறிந்து கொடுத்தால் அனந்தம் வியாதி தீரும்.

லிங்க கட்டு.

லிங்கத்தில் ரோமஞ் சுத்தி சுருக்கிட கட்டும வைத்தியம் வாத்திற்காம்.

வீரமெழுகு.

வீரம் பாகயிலை சாற்றில் சுருக்கிட்டு பின் சிறகீரை சார்விட்டு சீலை செய்து சிறுக எரிக்க மெழுகு சன்னி தோஷத்திற்கு அநுபானங்களிலிட தீரும். வாய்ச் சூலையில் லை.

வெடியுப்பு மெழுகு.

நாலாம் காய்ச்சல் கம்பி வாழைச் சார் 3 நாள் தெளித்து ரவி உலர்த்தி பின் பூனைரசச் சார், பிரமறிலைச் சார் விட்டு ஏழு நாள் ரவியில் வைத்து சிறுக எரிக்க மெழுகாம். வாய்வு என்பதற்கெல்லாம் அநுபானமறிந்து கொடுக்கவும்.

சங்கு பஸ்பம்.

சங்கை வெந்நீரில் போட்டு கழுவி சுண்ணாம்பு பொதிந்து எட்டு நாள் கழித்து துடைத்து போட்டு சீலைமண் செய்து கஜஜொடி* கஜபுடமிட பஸ்பம், அரிசி கழுநீரில் கொடுக்க வயிறு வலி நிற்கும். இந்த பஸ்பத்தை குகை செய்து அதனுள் சீனமிட்டு முன் சுண்ணமு மீட்டு வில்லை மூடி சீலை செய்து புடமிட சுண்ணம் வங்கத்திற்கு கொடுக்க நீர் வாங்கும்.

லிங்க பஸ்பம்.

[illegible]

..டு சில்லிட்டு சீலையிட்டு சேவல் புடமிட பஸ்பம்.

ரச பஸ்பம்.

வீரசூதமெடுத்து புழுங்கல் அரிசி தவுடு கட்டி வெள்ளெருக்கம் பால் விட்டு சீலை செய்து புடமிட ..ம்பம். (வேறு) சூதகம் கல்வத்திட்டு வேள வேர் ரசம் விட்டு ரெட்டோலையில் வழித்து வைத்து ..லை செய்து புடமிட பஸ்பமாம். சூலை கிரந்திக்கு கொடுக்கவும்.

கெந்தி பஸ்பம்.

மிளகு, தக்காளி ரசத்தில் கெந்தி யரைத்து வில்லை தட்டி உணர்த்தி சீலை செய்து ..மிட பஸ்பம். சங்கம் பழச் சாற்றில் சுருக்கிட லிங்கம் கட்டும்.

வெடியுப்பு சுன்னம்.

வெடியுப்பு படி ¼, மொந்தம் பழம் 3 உரித்து போட்டு பிசரி 3 நாள் ரவியில் .. வைத்து நாயுருவி இலை அரைத்து சட்டியிலிட்டு முன உப்பிட்டு அரைத்த சாந்தை மேலிட்டு ..லை செய்து புடமிட சுன்னம்.

இடிவல்லாதி.

செங்கோட்டை ஈருகிடாரி சானி சுத்தி செய்து பலம் 2 புசம் பாலில் சுத்தி பண்ணின ..ங்கி பட்டை பலம் 2 கழுவின எள்ளு படி 1 பனை வெல்லம் பலம் 5, மெழுகு போல் ..த்து புது கலசத்திட்டு சீலை செய்து சாளகுப்பையில் 8 நாள் புதைத்தெடுத்து கடற் ..யளவு மண்டலம் கொள்ள கால் பிடிப்பு மேல் தடிப்பு, கடு வீக்கம், கிரந்தி புண் ..லைவாய, மேல் வாயு, மற்ற வியாதியும் தீரும். வாதசீத மதார்த்த மாகாது.

சூத பஸ்பம்.

சூதம் நன்னாரி இலையில் 3 நாளரைத்து சீலை செய்து புடமிட பஸ்பம். அனுபான ..ந்து கொடுக்கலாம்.

(வேறு)

சூதம் கல்வத்திட்டு கல்லு உப்பு இட்டு கன்னிப் பாலிட்டு 1 சாமம் அரைத்த கழுவி ..ம் பாண்டம் துளைத்து விரையெடுத்து அதிலிட்டு வான் சுகர நெய் 4 பலத்திற்கு காலே ..ரக்கா படி விட்டு மேற்கண்ட வில்லை மூடி சீலை 15 செய்து குழி வெட்டி காட்டெரு முட்டை மத்தியில் வைத்து காய் முழுதும்படியாய் ஆட்டெரு முட்டை கொட்டி மேலு ..ட்டி போட்டு புடமிடவும். ஆறி யெடுக்க பஸ்பம். மேகுடைச்சல் பிடிப்பு சன்னி வாத ..டிப்பு மேல் தடிப்பு கருப்ப வெள்ளை ரணம் தீரும். பசுவின் பால் சாதம் சாப்பிடவும் ..வல்லத்தில் பணவிடை 6 நேரம் வலுத்தி வியாதிக்கு 6 நாள் 12 நேரம் கொடுக்கத் ..ரும். இச்சா பத்தியம்.

அண்ட பவுத்திரத்துக்கு.

பரங்கி பட்டை பலம் 6இ சிவனார் வேம்பு வேர் பலம் 6, சாம்பராணி பலம் 3/4 சங்கன் வேர் பலம் ½ இதுகளை சூரணித்து புது கலசத்திட்டு வெள்ள வெத்தலை ரசம் ..ட்டு கிளரி ரவியில் வைத்து கிளரி திரிகடி அளவு 45 நாள் சாப்பிட தீரும். இச்சா ..த்தியம்.

தேராத பிரமியத்துக்கு.

மூரம சக்கை நிழலில் உலர்த்தி சூரணித்து வடித்து 2 பங்கு சீனி 1 பங்கு சேர்த்து ..ரிகடி 3 நாள் 6 வேளை சாப்பிட தீரும். பாலும் சாதம். (வேறு) லிங்க மூலி ..ரணித்து நல்லெண்ணெயில் 3 நாள் காலையில் சாப்பிட்டு 6 நாள் பத்திய மிருக்க ..வெள்ளை தீரும்.

உப்பு செந்தூரம்.

கல்லுப்பில் புளியாரை விட்டு 1 சாமம் அரைத்து ஒட்டி வைத்து சீலை செய்து ..க்குட மிட செந்தூரம் முன் சாதத்தில் அரைத்து இம்மாதிரி 20 புடமிட செந்தூரமாம். ..விக்கும் குன்மத்திற்கும் கொடுக்கலாம்.

(வேறு) 3 பலம் உப்பு கல்லுகளாய் பொருக்கி மோரில் ஊற வைத்து ரவியில் உலர்த்தி முருங்கைப் பூ சார் விட்டரைத்து வில்லை செய்து வெள்ளெருக்கன் வேர் பட்டை பலம் 1, வெள்ள குன்றுமணி சார் விட்டரைத்து முன் வில்லைக்கு கீழும் மேலும் கவசம் கட்டி சீலை செய்து காய வைத்து கெஜபுடமிட செந்தூரம் குன்மத்திற்கு வெண்ணையில் 6 வேளை கொடுக்கலாம். ரவியிலும் கொடுக்கலாம்.

மேகத்திற்கு எண்ணை.

நல்லெண்ணை படி2, பொடுதலைச் சார் படி $\frac{1}{2}$, வல்லாரை சார் படி $\frac{1}{2}$, பெருந்த கரை சார் ப்டி $\frac{1}{2}$, பசுவின் பால் படி $\frac{1}{2}$, இது அரைத்து சித்தாமூலம் பலம் 4 சாதி லிங்கம் வீ 1, வீரம் வீ $\frac{1}{2}$, ரசம் வீ $\frac{1}{2}$, நட்சத்திரம் வீ $\frac{1}{2}$, கெந்தி வீ $\frac{1}{2}$, பழச் சார் விட்டரைத்து கொள்ளவும். எண்ணையில் போட்டு கலக்கி முன் ரசங்களும் சேர்த்து பனை வெல்லம் பலம் 8 போட்டு மெழுகு பதத்தில் காய்ச்சி எடுக்கவும். எண்ணைக் கொடுத்து, கடுகும் கொடுக்கவும். இச்சா பத்தியம், கை கன் பிடிப்பு குடைச்சல், ரணம் 3 நாள் கொடுத்து 7 நாள் பத்தியமிருக்கத் தீரும்.

கரு மேகத்திற்கு.

சின்ன கரண்டி 1 மண்டலம் கொள்ள இச்சா பத்தியம் தாது புஷ்டி உண்டாம்.

துருசு சுன்னம்.

கோது, கொட்டை நீக்கிய புளி பலம் 10 நிலாங்காய்ச்சல் இணங்கள் பலம் 10 சீனம் பலம் 1 கல்லுப்பு பலம் 1, நவச்சாரம் பலம் 1, கூட்டி இடித்து பாத்திரத்திட்டு சுட்ட சுன்னம் சுன்னத்தை பீங்கானில் பனியில் வைக்க செய நீராம். இன்னீரால் சேர் 1 சாரம் கல்வத்திட்டு 4 சாமம் அரைத்து சித்தன்ட குகையில் வைத்து சீலை செய்து உலர்த்திக் குக்குட மிட சாரங் கட்டும் கட்டின சாரத்தை பொடி பண்ணி பனியில் வைக்க செயநீராம், சுன்னீரில் வீரம் வீ 1, பச்சை கற்பூரம் வீ 1, பொடித்து போட்டு இன்னீரில் சிரகண்ணுகம் பலம் 1, உருக்கி 10 தடவை சாய்க்க கட்டும். இன்னீரில் ரவி 5 தடவை உருக்கி சாய்க்க களிம்பறும், இச்செம்பில் வீ 8 குகையிலிட்டு உருகும் போது கட்டும நாகம் வீ 2, கொடுக்க வய்து 6 இடக்கு தாய் சேர்க்க வகிடு வயது 8 லோகப்பொடி வீ10, கவுரி வீ 10, சாரச் செயநீர் விட்டு காயம் 1 அரைக்க வெங்காரம் பணவிடை கூட்டி உருக்க வெள்ளி குன்று போல் உருகி ஆடும், உருகு முகத்தில் தங்கம் வீ 1, கொடுத்து குகையில் முன் கட்டு நாகம் வீ 5, கொடுக்க களங்காம் இந்த களங்கம் வீ 1, தாமரம் வீ 7 வெள்ளி வீ 3 சேர்த்துருக்க வயது 6. சாரச் செய நீரில் வெங்காரம் வீ 1 அரைத்து துருசு கட்டி வீ 10ல் தடவி சரி ஒட்டில் இடிக்கையால் வாட்டி செயநீரில் நனைத்து 3 நாள் ரவியிலிட சுக்கான் போல் வெளுத்து கட்டும் பூனீர் சட்டியிலிட்டு மத்தியில் துருசிட்டு மேலும் பூனீரிட்டோடு மூடி சீலை செய்து அடுப்பில் இட்டு 2 சாமம் எரிக்க சுன்னம். இச்சுன்னத்தின் பிரயோசனம் சாஸ்த்திர மூலமாயும், பெரியோர் மூலமாயும் அறிவாயாக.

சாரக் கட்டு.

கல் சுண்ணும்பு பலம் 5, வெடியுப்பு பலம் 1, கல்லுப்பு பலம் 1, சாரம் பலம் $\frac{1}{2}$. சுண்ணும்ப் தெளிவு விட்டரைத்து 2 பலம் சாரக் கட்டிக்கு கவசம் செய்து பூனீர் மண்ஓடுக்குள் வைத்து கமலாக்கினியாய் 4 சாமம் எரிக்க கட்டும். கட்டின சாரத்தை பங்கம் பாஷாண சாத்தில் பொடித்து போட்டு கலக்கி நாகம் உருக்கி சாய்க்க கட்டும் (நல்ல வெள்ளி 7, செம்பு 3) -(நாகம்1 தங்கம் 1) (தாமரம் 10 தங்கம் $\frac{1}{2}$, நாகம் $\frac{1}{2}$)-

உருத்தரி கட்டு.

கருவங்கம் பலம்1,5ம் காய்ச்சிய் வெடியுப்ப பலம் $1\frac{1}{4}$ போட்டு நாயுருவி கத்தையால் வருக்கச் சுன்னம் ருத்தரி பலம் 1, குகையில் சுன்னமிட்டு மத்தியில் வைத்து மேலும் சுன்னமிட்டு சட்டியில் மணல் மேல் வைத்து காட்டாமணக்கு பால் 3 சாமம் சுருக்கு கொடுக்கவும். கருவங்கம் உருக்கி 10-க்கு 1 கொடுக்க மதி 7, ரவி 3 ஒன்றுவொன்று கொடுக்கவும்.

ஈத பஸ்பம்.

கள்ளிப் பால் எருக்கம் பால் சூதத்தில் விட்டரைத்து ரெட்டோலையில் வைத்து உப்பு
ச் சீலை செய்து உலர்த்தி 5 எருமுட்டையில் புடமிட பஸ்பம்.

பாஷாண பஸ்பம்.

சதுர கள்ளிப் பால் 7 நாள் கள்ளிப் பாலில் 7 நாள் எருக்கம் பாலில் 7 நாள்
ரவைத்து பின் சதுரகள்ளிப் பாலில் மெழுகு போல அரைத்து இம்மாதிரி 7 தடவை அரைத்து
ருட்டி உலர்த்தி பின் பொன்னுங்கண்ணி சீலை மரைத்து பாஷாணத்திற்கு கவசித்து நல்
லன்னையாவது சித்தா மணக்கு என்னையாவது இருப்புக் கலசத்திட்டு உருண்டையை அதி
ட்டு 4 சாமம் எரித்து ஆறிய பின் பார்த்தால் அமுக்கு புடவை நிரம்பியிருக்கும், அதக்
கடுகும் உளுந்தும் கள்ளிப் பாலில் அரைத்து கவசித்து முன் போல் எரித்து மண்
ாத்திரத்தில் மணலிட்டு கவசத்தை அயக் கலசதிட்டு நிறைய காணி ரசம் விட்டு மேல் மூடி
லை செய்து மணல் பாத்திரத்தில் வைத்து நிறைய மணல் கொட்டி அடுப்பேத்தி குளிர
ர விட்டெடுக்க மலர்ந்திருக்கும் எடுத்து வைத்துக் கொண்டு சர் காய்ச்சலுக்கும் அனு
ான மறிந்து கொடுக்கவும். சுத்தி பண்ணின ரவிக்கு 10ல் 1 கொடுத்து எடைக்கெடை
தி சேர்க்க நல்ல மதியாம்.

கூமாத்தி தழை ரசம் 1 படி பட்டையை உரலில்இடித்த கஷாயம் வைத்து ரசம்
படி விளக்கெண்ணை படி 1 இதுகளை சேர்த்து வெய்யிலில் வைத்து காய்ச்சி இறக்கின
ரகு வடிகட்டி பனம் கல்கண்டு 2 அளவுக்கும் குங்குமப்பூ 2 அளவுக்கும் வாங்கி அதில்
ாட்டு இராத்திரியில் ஒரு சின்ன கரண்டி முட்டையில் சாப்பிட்டு வரவும்.

கெந்தி நெய்.

கெந்தி பலம் 2, சூதம் பலம் 2, சூரி பலம் 2, பூரம் பலம் 2, வீரம் பலம்1,
ளகம் பலம் 1, மனோசிலை பலம் 2, சாரம் பலம் 1, வெடி பலம் 1, வெட்ட
ய்த தாமரைத்தாள் ரூபாயிடை 1, பசு நெய் படி 1, மை போல் அரைத்து குளித்
லம் இறக்கி கொள்ளவும். தைலம் காசிடை 1 சீனியில் கொடுக்கவும். இப்படி இரு
ரம் மேகத்தினவு தடிப்பு திமிர், செவ்வேட்டை பீனிசம் கண்டமாலை விப்புருதி காசம்
ம் தீரும். பத்தியமில்லை.

கருவங்கச்செந்தூரம்.

கருவங்கம் பலம் 2, விளக்கெண்ணை விட்டு இறக்கி மேதிச் சாணி ரசத்தில் ஏழு தடவை
ய்த்து அழிஞ்சியிலைச் சாற்றில் ஏழு தடவை சாய்த்து வங்கம் படி 1 பங்கு அருசு
ாடி செய்து வங்கத்தை உருக்கி அருசு பொடியை 10 பாகம் செய்து ஒவ்வொரு
கமாக போட்டுக் கிண்டி கத்தாழை போட்டுக் கிண்ட முதல் பஸ்பமாய் பின்னால் செந்
ரமாய் விடும். விநாயக பூசை செய்து ச்சாவிலடைக்கவும். பித்த சரீரத்திற்கு ஒரு
ரத்திற்கு பணவிடையாக 2 நேரமும் அனுபானத்திலிடவும். இம்மாதிரி ½ மண்டலம்
த்தியம் கார்ப்பு, புளிப்ப நாலு நாளைக்கு ஒரு தடவை எண்ணை ஸ்நானம் செய்தல்.

இஞ்சி ரசாயனம்.

அரைப்படி எலுமிச்சம் பழச் சாற்றில் இந்துப்புகைக் கரைத்ததை அதில் மேற்
ால் போக்கின இஞ்சியை 10 பலம் பணம் போலரிந்து போட்டு 3 நாள் ஊற
த்து உலர்த்தி இடித்தது வடி கட்டின சூரணத்தையும், திரிகடுகு, திரிபலை, சீரகம்,
குப்பை, மகரப்பூ, அதிமதுரம், அதிவிடையம், மல்லி, ஓமம், கற்கடகசிங்கி, தாளிசப்
திரி, சோமலுப்பு, பொட்டலுப்பு, லவங்கம், லவங்கப்பத்திரி, சன்னலவங்கம் பட்டை,
கக்குப் பலம் ½, கோஷ்டம், அக்ராகாரம், பெருங்காயம் வகைக்குப் பலம் ¼,
ாஷ்டம், அக்ராகாரம், பெருங்காயம் வகைக்கு பலம் 1/8, பரங்கிப்பட்டை,
திர மூலப் பட்டை, வகைக்குப் பலம் 10 இவைகளை வெதுப்பி இடித்து வடிகட்டின
ணத்தையும் மேற்கண்ட சூரணத்தோடு கலந்து அதில் தேன் ஆவி நெய் வகைக்கு படி 1
டு நன்றாய்ப் பிசைந்து அவைத்துக கொண்டு நெல்லிக்காய் பிரமாணம் மண்டலம் கொள்ள
ஷ்டகுஷ்ட குன்மம், நெஞ்செரிவு, வாந்தி, குடல் புரட்டல், நடுக்கல், கழிச்சல்,

வயிற்றெரிச்சல், வயிற்றெரிதல், மண்டைக் குத்து, பித்தபடபடப்பு, வாய் நீருறல், விலாக் குத்து, உருத்திர வாய்வு, செரியாமை, அரை சேர்கு போல கழிதல், அபானக் கடுப்பு பொருமல், கை கால் ஓய்வு ஆகிய இவைகள் தீரும்.

வீரமெழுகு.

வீரம் விராகனிடை 7, கரண்டியிலிட்டுக் கொம்புப் பாகலை, பிரண்டை, சம்பளம், இவைகளின் ரசம் வகைக்கு ½ படி எடுத்து வீரத்துக்குச் சுருக்குக் கொடுத்து மெழுகாக்கி வைத்துக் கொண்டு இளகிடை வெல்லத்தில் வைத்து சாப்பிட வெட்டை, பிடிப்பு சரீர பதம் அறிந்து கொடுக்கவும். வாய் பிடித்தால் நிறுத்தவும். பசும் பால் அன்னம் சாப்பிடவும். 7-நாள் தலைக்கு நீர் விடவும். இந்த மெழுகு அனுபானம் அறிந்து சன்னி முதலான அநேக வியாதிக்குக் கொடுக்கவும். விடத்தேர் வேர் பலம் ½, பனைவெல்லம் பலம் ½, சேர்த்தரைத்து தேத்தாங் கொட்டை பிரமாணம் 7 நாள் சாப்பிட கரந்தி, அரையாப்பு, சூலை, கண்டமாலை, கன்னபுத்து, கண்ணோசை, மேகம், காமாலை, கர்ப்பவூறல் தீரும். கடும பத்தியம். மேற்கண்ட மெழுகை விடத்தேர் மெழுகில் வைத்து சாப்பிடுவது நலம்.

பிரமியத்திற்கு.

கற்கண்டு விராகனிடை 1, சீரகம் விராகனிடை 1, ஈர வெங்காயம் சின்னப்படி 1, எருமைத் தயிர் படி 1, வெங்காயத்தை உரித்து தயிர்ப் போட்டு சுண்ட கொதிக்க வைத்து முன் சரக்கையும் பொடி செய்து போட்டு 3 பாகமாக ஒரு நாளைக்குச் சாப்பிடவும். வெட்டைகள்

கர்ப்ப நிற்க மருந்து.

எலைக் கள்ளிப் பட்டை பொடி செய்து தூரமான மூன்றும் நாள் பசும் பாலில் ஒரு சிடிகை போட்டுக் கொடுக்கவும், மருந்து தின்ற 33/8 நாழிகைக்குள், புருஷ சம்பந்தம் செய்து கொள்ள கர்பமுண்டாம்.

கந்தக சுத்தி.

கெந்தி பலம் 5, இளநீரில் எட்டு நாள் ஊற வைத்து இருத்து உலர்த்திப் பொடித்து பாத்திரத்திட்டு சீனி சமன் கூட்டி வெறுக்கடி உண்ண வாய்வு சிலேற்பனம் போம். இருமலுக்குத் திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், பொடித்து முன் மருந்தும் சேர்த்துச் சாப்பிடவும். பசு நெய், பசும் பால் சேர்த்துக் கொள்ளவும்.

பைத்தியத்திற்கு.

இஞ்சிச் சார் படி 1/8, சம்பளச் சார் படி 1/8, கோஷ்டம் பேய்ப் படல், சமன் பொடித்துக் கலக்கி சாப்பிடவும். நிவர்த்தி வெள்ளுள்ளி பழச் சாற்றில் அரைத்துக் கொடுக்கவும். பெருங்காயம் பழச் சாற்றில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

கருங் குங்கிலியத் தைலம்.

சுத்தி செய்த வேண்டிய கருங்குங்கிலியம் எடுத்து வாலைத் தைல மிறக்கி துட்டிடை அனுபானத்திலிட க்ஷிவிஷ முள்ளது 18 கிரந்தி 11 வகை சிரங்கு 10 வகை செவ்வாப்பு உதிரச் சூலை 18 குஷ்டம், பெரு வியாதி சூலைக் கட்டு, இதுகள் தீரும். பணவிடை தாம்பிரப் பஸ்பம் துட்டிடை தைலத்தில் சாரித்து 10 நாள் கொள்ள வைத்தில் கெண்டை கவுசை, இரத்தமாக அறுந்து விழும்.

ஜீரத்தில் வந்த காமாலை வீக்கந் தீர மருந்து.

நஞ்சு வித்து விராகனிடை வெந்நீரிலரைத்து 3 நாள் சாப்பிட்டு 3 நாள் உப்பு, புளியில்லாமல் பத்தியம் காக்க 7 நாள் பத்தியம் முறிக்கவும். காமாலை ஜீரத்தில் வந்த வாதம் தீரும்.

மேனியிலை, ஈருள்ளி, சீரகம் கூட்டியரைத்து சம்பளப் பிரமாணம் 3 நாள் சாப்பிட 6 வேளை உப்பு, புளி காக்கவும். 7 நாள் பத்தியம் முறிக்கவும், சகல காமாலை தீரும்.

சிறு பாவட்டை இலை ஒரு பிடியெடுத்து பசுவின் பாலில் பிசைந்து வடித்துக் குடிக்கவும். உப்பு, புளி காக்கவும். முன்மாதிரி பத்தியமிருக்கவும். முன் வியாதி தீரும்.

பெரும் பாட்டுக்கு.

ஞா சிலம்பு, நாழி மருங்கைப் பூ நாழி, நெருஞ்சி வேர் பலம் 1, நிலப்பனைக் கிழங்கு, பலம் 1, மரும் பலம் 2, நன்னாரி வேர் பலம் 2, சதா வேரிக்கிழங்குபலம் 3, இவைகளை உலர்த்திப் பொடித்து பசுவின் பால் வள்ளம்1 நாவிலொன்றாய்க் காய்ச்சி முன் பொடியைத் தூவி கிளரி திரண்டு வரும் போது ஒரு படி தேன் விட்டுக் காய்ச்சி பசுவின் நெய் விட்டு சுவரக்காய்ச்சி பதத்தில் இறக்கி சர்க்கரை 1 படி போட்டுக் கிளறி வைத்துக் கொண்டு புன்னைக்காய் பிரமாணம் இரண்டு நேரங் கொள்ளவும். பெரும்பாடு 21. வகை பிரமியம் எழும்புருக்கி உஷ்னம் இதுகளெல்லாம் தீரும். மண்டலங் கொள்ள.

சத்தி குன்மம் பஞ்ச குன்மத்துக்கு.

நாரதம் பழம் ரசம் வள்ளம் 1, சித்தா மணக்கஞ் சார் படி 2, தோலை முளை நீக்கிய வெள்ளுள்ளி அரைத்தது பெரிய பலம் 15 கல்லுப்பு படி ½, பொடித்த இதுவெல்லாடம் முன் ரசத்திலிட்டு குரகக் காய்ச்சி வைத்துக் கொண்டு சாப்பிட தீரும். வியாதி சத்தி குன்மம் பஞ்ச குன்மம் தீரும்.

தாளிச பத்திரி வடகம்.

தாளிச பத்திரி, ஏலம், மிளகு, சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், சீரகம், கண் பெரங்கி, கற்கடக்கிழங்கு, கருஞ் சீரகம், முந்திரிப் பழம், பேரீச்சம் பழம் சமன் கட்டி சூரணித்த வெல்லங் கட்டி இடித்துக் தான்றிக் காயளவு கொள்ள சுவாச காசம் இருமல், அரோசிகம் பைத்தியம், அஜீரணம், அக்கினி மந்தம் இவைகள் தீரும்.

சூலை வியாதிக்கு.

பரங்கிப் பட்டை, பலம் 16, மிளகரணைப்பட்டை, சுக்கு, திப்பிலி, ஓமம், கண்டு பரங்கி, விலிங்கம் பட்டை, ஆலிலைப் பட்டை, செங்கத்தாரிப் பட்டை, செங்க வேர்ப் பட்டை, வெள்ளெருகு சமூலம் உலர்த்தி வகைக்குப் பலம் ½ சூரணித்து இதில்சீனி கலந்து நெய்யிலும் சாப்பிடலாம். அல்லது சாதிலிங்கம், சாம்பிராணி, பதங்க மேத்தி சாப்பிடலாம். கை கால் பிடிப்பு, கெத் தடிப்பு, மேக ஊரல், முதலியது நீங்கி பசியைத் தரும். இச்சாப் பத்தியம்.

கர்ப்ப விப்புருத்திக்கு.

மாவிலிங்கந் தழையை அரைத்து பசும் பாலில் குடிக்கவும். மாவிலிங்கம் பட்டை, சூரணித்துக் கொண்டு கருங்குலை நீ அரிசி மாவு செய்து கொண்டு பசுவின் பால் கொதிக்க வைத்து இரண்டு மாவையும் போட்டுக் கிண்டி பனைவெல்லம் போட்டுக் கிளறி சரீரமறிந்து ஒரு நேரஞ் சாப்பிட வயிற்றில் மேல் கை வைத்திருந்தால் படலென்று உடைவது சத்தம் தெரியும். அளவறிந்து கொடுக்கவும்.

வைத்தியம் 2 மாதத்திற்கு.

மேனிஇலையை எலுமிச்சங்காயளவு அரைத்துஆழாக்கு எண்ணெயில் மத்தித்து நாலு நாழிகை தலைக்குத் தேய்க்க மயக்கமாய் நித்திரை வரும். மயக்கமானால் 2 மாதம் தீருமென்றதிக. பைத்தியத்திற்கும் இம்மாதிரி தேய்த்து எண்ணைத் தலையோடு இருந்து மற்று நாள் எலுமிச்சம் பழத்தை அக்கினியில் சுட்டு சுட சுட தலையில் பிழிந்து தேய்த்து நா ற குடம் ஜலம் விடவும். பசுந் தயிர் சாதம் கொடுக்கவும். நற்ற சீரகம், கருஞ் சீரகம், ஏலம், தலம், தனித் தனியே களாக்காய் பிரமணம் அரைத்துக் கொண்டு சிறுகீரைவேர், பொன்னாங்கண்ணி வேர், முத்தக் காசு, குருஞ்சா வேர், பாலை வேர், பேய்படல், இவைத் தனி தனியே முன் 1 பிரமானப்படி அரைத்துக் கொண்டு இது இரண்டையும் கலந்து பாதியெடுத்து அரை உழக்கு நெய்யில் போட்டு சர்க்கரை கட்டி உள்ருக்குக் கொடுக்கவும். கொஞ்சம் முலைப்பால் எலுமிச்சம் பழம் சார், வெண்ணெ, பசுநெய், இந்த நன் வகையும், ஒவ்வொரு கட்டி இதில் மற்ற பாதி மருந்தும் கலந்து உச்சந் தலையில் ஒரு நாழிகை வகையில்தேய்த்து மயிரை உச்சந்தலையில் முடிந்து ஆமணக்கிலையை சுழக்கட்டவும். பதிறியம் புளிப்பு தவிரவும். பசுவின் தயிரில் முதலாக ஆகும். உடனே பயித்தியம் 2 மாதத்திற்குள் தீரும்.

இம்மாதிரி மூன்று தடவை செய்யவும் குப்பை மேனி, விளக்கெண்ணை ஒரு தடவை வெள்ளெழுத்துக்கு சேர்த்துக் கொள்ளவும்.

வெள்ளெழுத்துக்கு.

மகிழம் விரை, நீரிலரைத்து கண்ணிலிட வெளிச்சமாம்.

ஆடு, மாடு, மனிதர், குழந்தைத் வயிற கழிச்சலுக்கு மந்திரம்.

ஒரு பாத்திரத்தில் ஒரு அவுன்ஸ் ஜலமெடுத்து 7 பரிக்கை மணிக்கல்களால் "மந்திர பாணி விஷ உரீ" என்று ஒவ்வொருக்கல்லுக்கு ஒவ்வொரு மந்திரமாக ஜலத்தில் போட்டு இப்படி 7 தடவை சொல்லிப் போடவும். இச்ஜலத்தை மூன் வியாதியுள்ளவர்களுக்குக் கொடுக்க நிவர்த்தியாம்.

பித்த சுரத்துக்குக் கஷாயம்.

முந்தக் காசு, பேய்ப்புடலும், முதிரும் வேலி முசுமுசுக்கை மற்றும் பற்படாகமுடன் மருவுஞ் சுக்கு சமன் கட்டி நித்த மிதனை 1/8ப் நேராய்ச் காய்ச்சி கொள்வீரால் பித்த சுரங்கள் விட்டோடும. பெரியோருரைத்த கஷாயமதே.

பல் வலிக்கு.

பனைவேர் ஒரு பிடி நறுக்கி நாழி நீரிலிட்டு கஷாயஞ் செய்து காசெடை துருசு பொடி போட்டு வாய் கொப்பளிக்கவும் வலி நிற்கும்.

கிரந்தி அரையாப்பு.

சர்க்கரை படி 1, நல்லெண்ணை படி 1, கலந்து கொதிக்கும் போது கொடி வேலி வேர் மாங்காயளவ அரைத்து கொதிக்கும் சமயத்தில் போட்டுக் கலந்து பின் நல்ல சீரகம் பலம் 1, நல்ல வெல்லம் 1, அச்சு இதுகளைப் பொடி பண்ணி போட்டுக் கலந்து எடுத்து வைத்துக் கொண்டு தினம் ஒன்றுக்கு ஒரு கரண்டி கொள்ளவும். பவுத்திரம், சிலந்தி அரையாப்பு, கிரந்தி தீரும். சந்தேகமில்லை.

குஷ்ட்டம்.

காட்டுக் கரணைக் கிழங்கு பலம் 46, சேராங் கொட்டை பலம் 8, சுக்கு பலம் 4, செவியம் பலம் 3, சிறு நாகப்பூ பலம் 1, மிளகு பலம் 1, சீரகம் பலம் 1, வாய்விளங்கம் பலம் 1, எவர்ச்சாரம் பலம் 5, சத்திச் சாரம் பலம் 5, வெங்காரம் பலம் 5, சீன்காரம் பலம் 5, நவச்சாரம் பலம் 5, பெருங் காயம் பலம் 5, திப்பிலி பலம் 1, சித்ர மூல வேர்ப்பட்டை பலம் 2, இதுகளை இடித்து சூரணித்து இரு நேரங்களில் கொள்ளவும்.

மூலம் நாலு வகை, கிராணி 18 வகை, குஷ்டம் இருபது வகை மேகம், பஞ்சு குன்மம்

உன்மத்திற்கு.

பங்கம் பாளை, சமூலம், எருக்க மொட்டு, கருஞ்சீரகம் சமனாய் எடுத்து நசுக்கி, துணியில் பொட்டணமாகக் கட்டி வடிகட்டிய அன்னும்பு பொட்டணத்துக்கு மேல் பூசி ஒட்டில் வைத்து சீலை செய்து வராக புடமிட்டு காசிடை பஸ்பம் சாப்பிட்டு வர குன்மம் தீரும்.

பீனிசத்துக்கு நெய்.

பசு நெய் படி 1, ஏலம் பலம் 1, குங்குமப்பூ பலம் ½, ஜாதிக்காய் பலம் வீ44, லவங்கம் வீ 2, கோரோசனம் வீ 2, இதுகளை அரைத்து நெய்யில் எரித்து வடித்து வாரத்துக்கு இரண்டு தடவை முழுகவும். நாசியில் நசிய இடவும். இதில் சர்வ பீனிசமும் தீரும்.

பீனிசத்துக்கு திரி.

சாதிலிங்கம் வீ 2½, எலுமிச்சம் பழம் 10, பச்சைக்கற்பூரம் பணவிடை 4, கோரோசனம் வீ 2, காயம் வீ 4, இதுவெல்லாம் முன்பு ரசத்தில் அரைத்து வெள்ளை வஸ்திரத்தில் தடவி திரித்து நிழலிலுலர்த்தி புகை பிடிக்க 18 பீனிசமும் தீரும்.

தலைவலி பீனிசத்திற்கு திரி.

சீரகம் தேத்தாங்கொட்டை, திப்பிலி, மிளகு, சுக்கு, பாரிய் மஞ்சள், ஓமம் பரிமள சந்தனத்தூள் நேரநாம் குங்குமப் பூ நெரியதாய் பஞ்சிலூட்டி காரமாம், புகையை முக்கில் கலரிடை கொளுத்திக் காட்டே.

பித்தமெழுக்க விரோசனமாக்கு.

தேத்தாம் பழச்சார் சீலையில் ஊட்டி உலர்த்தி வேண்டிய போது கொஞ்சம் கிழித்து வெந்நீரில் கரைத்துக் கொடுக்க பித்த மெடுக்கும்.

விரோசனம் செய்ய.

ஒர படி கடலை தண்ணீரில் ஊரப் போட்டு உதையத்துக்கு முன எடுத்து வடித்து முன்று எலுமிச்சம் பழம் பிழிந்து சர்க்கரை போட்டு மூன்று நாள் கொடுக்க விரோசமாம் ஒரு நாளும் வராது.

வெறி கொண்ட பித்தத்திற்கு.

கழுதைப் பால் சிற கூறும் இஞ்சிச் சாறு ஒரு கூறும் சர்க்கரை கலந்து கலக்கி எட்டு நாள் கொடுக்க வெற் பைத்தியம் நிவர்த்தியாகும்.

சேராங் கொட்டை வடகம்.

சித்திர மூலம், ஓமம், காயம், திப்பிலி, தேசாவரம், சுக்கு, மிளகு, கண்டு பரங்கி, கற்கடக சிங்கி, செவ்வியம், திரிபலை, ஏலரிசி, கிராம்பு, லவங்கப்பத்திரி, முடிவாளை வேரு, அதிவிடயம், பாவயம், வேர், வேப்பம் வேர், முத்தக் காசு, அசுவகெந்தி, புளியம் வேர், ஆவாரம் விரை, நிம்பை வித்து சமனிடையாக சூரணித்து சூரணம் ஒரு பங்கு சேராங் கொட்டை 2 பங்கு வெல்லம் 3 பங்கு இவையெல்லாம் இடித்து முள்ளிக்காய் மாதிரி 12 நேரம் காலையில் சாப்பிடவும். ஆசனக்கண்ட மாலை, ஐவகை சூலை, 30 வகைக் காசம், ஐவகை ஐயம் உதிர வியாதி 4, 4 வகை மகோதிரம், 3 வகைக் காய் , 6 வகை மேக வியாதி, இ2 இதவெல்லாம் தீரும்.

இடுப்பு வலிக்கு.

இலப்பத் தழையை ஜலம் விட்டு இடித்து $\frac{1}{4}$ படிரசம் பிழிந்து 1/8 படி நல்லெண்ணை விட்டு கலந்து சாப்பிடக் கொடுக்கவும். இடுப்பு வலி நீங்கும்.

கூழ் பாண்ட.

கூழ்பாண்ட மேல் தோல் வித்து நீக்கி சன்னகப் அறுத்தல் உலர்த்தி சூரணித்து பசுவு நெய்யில் சிவக்க வருத்தபின் திரிகடுகு பலம் 1, கொத்தமல்லி பலம் $\frac{1}{4}$, பச்சை லைப்பம் $\frac{1}{4}$, அதிவிடயம் பலம் $\frac{1}{4}$, ஏலம் பலம் $\frac{1}{4}$, லவங்கப்பட்டை பலம் $\frac{1}{2}$, சீரகம் பலம் 1, அதிமதுரம் $\frac{1}{4}$, கோஷ்டம் பலம் $\frac{1}{4}$, கூகை நீர் பலம் $\frac{1}{4}$, தேவதாரம் பலம் $\frac{1}{4}$, நிலவேம்புடம் பலம் $\frac{1}{4}$, இவையெல்லாம் சூரணித்து ஒரு படி பசு நெய்யில் கூழ் பாண்ட சூரணம் சிவந்து வரும் சமயத்தில் மத் சூரணங்களையும் போட்டு கருகாமல் கிண்டி எடுத்து வைத்துக் கொண்டு நேரம் ஒன்றுக்கு விராகனிடை 1 இரு வேளை சாப்பிடவும். உடம்பு எரிவு, ஆகாயம், இருமல், உள் மாந்தை சுவாச காசம், ரக்த பித்தம், ஈளை, இரைப்பு, உப்புசம், சோகை, காமாலை, பயித்திய காமாலை, பாண்டு ரோகம், முலைரோகம் அக்கரம், உள் காய்ச்சல், சகல மயக்கம், தலைவலி அஸ்தி சுரம், குன்மம் பயித்திய வியாதி, தபனம், இளைத்த உடம்பு பூரிக்கும், கிராணிகள், சூலை பிரமியம், இவை தீரும். மத்தியம் அவரைப்பருப்பு, மிளகு நீர், பசுவின் பால் நெய் கூட்டவும்.

கட்டின மாலைக்கு.

சூதம், கெந்தி, இந்து சமன் கட்டி ரவிப்பால் விட்டு அரைத்து பூச கண்ட மாலை வீக்கந் தீரும். கொட்டைக் கரந்தை வேர், மேற்கண்ட சார் வார்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குப் பூச தீரும். புண்ணாயிருந்தால் முத்தின கிளுவை அடிப்பிடட வெட்டி உலர்த்தி சூரணித்து புண்ணின் மேல் தூவ, நீர் வற்றி ஆறும்.

இருமலுக்குப் புகை.

தாளகம், வேலிப்பருத்தி இலைச் சாற்றிலும், முருக்கிலைச் சாற்றிலும், சங்கிலைச் சாற்றிலும், மை போலரைத்து வெள்ளைச் சீலையில் தடவி உலர்த் மோருஞ் சோறன்டு இந்தத் திரியை கடுதாசியில் சுற்றி நெருப்பில் காட்டி புகைக்கு குடிக்கத் தீரும்.

குதம்பை சித்தர் மாத்திரை.

நட்சத்திரம் பலம் ½, குங்குமப்பூ பலம் 1 பச்சகற்பூரம், பலம் ½, லவங்கம் பலம் ¼, லவுங்கப்பட்டை பலம் ¼ கோஷ்டம் பலம் ¼, வல்லி கற்பம் பலம் 1/8 இவைகளை கல்வத்திட்டு சந்தன தூள் பலம் 5 லவுங்கப் பூ காசிடை1 முத்தால் காசிடை 1 மாஞ்சில் காசிடை 1 சிற நாகப்பூ காசிடை 1 மண் பாத்திரத்திட்டு ஜலம் விட்டு சுண்ட கஷாயம் செய்து முன் சரக்கில் விட்டு 2 நாள் அரைத்து பிசின் பதமான பின் குன்றி போல் உருட்டி பரணியில் அடைத்து பூசை செய்து திரிகடுகிலாவது, தேனிலாவது துளசி ரசத்திலாவது அரிந்து கொடுக்க சுரம், சன்னி, மயக்கம், சிரநீர், வாதபித்தம், தலை வலி, ஆயசம், சீதளங்கள் இன்னும் அந்தந்த வியாதிகளுக்கும் வியாதியின் நிதானங் கண்டு தக்க அநுபானங்களிலிட நிவர்த்தியாம். பத்தியம் முருங்கைபிஞ்சு, கத்திரி பிஞ்சு, முருத் துவரை மிளகு நீர் இவைகள் சேர்க்கவும்.

சுரம், ஈளை காசம்.

மேனி, மிளகு, அரைத்து கொடுக்க தீரும்.

மேகவாய்வுக்கு.

பட்டை வெள்ளுள்ளி மிளகு, கூட்டி அரைத்து சாப்பிட சொரி சிரங்கு கிரந்தி வயிற் வலி குன்மம், மகோதரம், மோரோகங்கள் தீரும்.

குஷ்டத்திற்கு.

வெள்ளருக்கன் வேர் பட்டை, ஆடுசலின் பட்டை இடித்து சூரணித்து தேனில் கொள்ள குஷ்டம்; விஷம் தீரும்.

ரசகற்பூர மாத்திரை.

பூரம் பலம் 1, தேனிலும் பழ ரசத்திலும் கருக்கிட்டு சுத்தித்த சாமம் 2 கல்வத் திட்டு வெண் மிளகு பலம் 1 கூட்டி சம்பழ சாற்றில் சாமம் அரைத்து பசும் பயர் போல் உருட்டி நிழலிலுலர்த்தி சீசாவில் அடைத்து தியானித்து கொடுக்க வாய்வு, பக்கு சூலை, குத்தல், குளிர் இவைகளுக்கு அந்தி சந்தி திரிகடுகு தேனில் கொடுக்க தீர்ந்து குடைச்சலும் தீரும்.

கபாட குளிகை.

சாதிக்காய், சாதிபத்திரி, அதிவிடயம், களாத்திகாய், வெட்பாலை, சிறநாகப்பூ லவுங்கம் காயித்தி பூம் சீவம் பட்டை, ஓமம் சிங்கிலி குரோசாணி, கக்கு, புளியந் தோல், காசுகட்டி கஞ்சாவித்து காமம், அசுமதாகம், இடித்து சூரணித்து கல்வத்திட்டு பழ சாற்றில் ஆட்டி விளாம்பிசின் பலம் ½, போட்டு அபின் பலம் கால், பின்னும் 1 சாமம் அரைத்து லிங்கம் பலம் ½. நே கெந்தகம் பலம் ½-ம் கூட்டி தேன் விட்டு 2 சாமம் அரைத்து இப்படி 3 நாள் அரைத்து பரணியில் அடைத்து தேகமறிந்து கடலைப்பயரளவு தேனிலும் சர்க்கரையிலும் ½ அதிவிடய கஷாயத்திலும் அரிசி கஷாயத்திலும் ஓமம் பலம் 1 சீரகம் பலம் ½ கருக்கிய கஷாயத்தில் கற்கண்டு சர்க்கரை பாலும் சேர்ந்த கஷாயத்திலும் கொடுக்கவும். பத்தியம் கோதுமை கஞ்சியில் சீனி சேர்த்து சாப்பிட்டாலும் வாழை கச்சல் சமைத்துகூட்டிலும், கிராணி வெத்தோமம் மூலக் கிராணி வயருடைச்சல் நிவர்த்தியாகும்.

ஓமம் அரைத்த வெந்நீரில் ஸ்நானம் செய்ய கடவுள் கிருபையால் நன்மையுண்டாகும். சரீர மறிந்து பத்தியம் செய்யவும்.

சர்வ ரோக நிவாரண பட்சணி.

